RESOURCES FOR MTLs

# எழுதுதலுக்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துதல்

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் முறையாக எழுதத் தொடங்குவதற்கு முன் தசைநார் இயக்கத் திறன்களையும், கண்-கை ஒருங்கிணைப்பையும், எழுதுவதற்கானச் சரியான உடற்பாங்கையும் வளர்த்துக்கொள்வார்கள். முறையான பயிற்சிகள் அளிப்பதன்வழி பிள்ளைகள் தமிழ் எழுத்துகளை முறையாகவும் சரியான வடிவிலும் எழுதத் திறன் பெறுவார்கள். அவர்கள் எழுதுகோலை விரல்களால் சரியாகப் பிடித்து எழுத்தின் வடிவத்தை அமைப்பார்கள்.

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **சிந்தனைகளை வெளிப்படையாகப் பிரதிபலித்தல், குறியீடுகளை வரைதல், எழுத்துக்களை எழுதுதல்**

- ✓ கிறுக்கல்கள் செய்யவும் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்கவும் தடித்த பென்சில்/ வண்ண எழுதுகோலைப் பயன்படுத்துதல்
- ✓ மணலில் வரைதல், விரலில் தடவப்பட்ட வண்ணங்கள் முதலியவைமூலம் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்குதல்
- ✓ ஓர் எழுத்தின் கோடுகளை முறையாக எழுத முயலுதல்

## 1. பொருத்தமான தசை நார் பயிற்சிகள்

தசைகளையும் பிற புலன்களையும் ஒருசேர இயக்குவதற்கு ஏற்றவாறு விளையாட்டுகளை அமைத்துக் கொடுத்தால் குழந்தைகளின் தசைகள் தம் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இணங்கிச் செயற்படும். எழுதத் தொடங்குவதற்கு முன் பிள்ளைகளின் கை, முன்கை, மணிக்கட்டு, விரல்கள், தசை நார்கள் விருப்பப்படி இயங்கவல்ல பயிற்சிகள் அளிக்க வேண்டும் (சுப்புரெட்டியார்.நா,1964).

விரலசைவைப் பழக்கப்படுத்துவதற்காகப் பிள்ளைகளுக்குப் பின்வரும் பயிற்சிகளைக் கொடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| அ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 1**<br><br>கை விரல்களால் மெதுபந்தை அழுத்துதல் |
| ஆ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 2**<br><br>ஒரு கிண்ணத்தில் பந்தை வைத்துக் கை விரல்களால் பந்தை வலஞ்சுழி முறையில் சுழற்றிக் காட்டுதல் |
| இ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 3**<br><br>வண்ண மணலில் ஆள்காட்டி விரலை நீட்டி வலஞ்சுழி முறையில் வட்டமிடுதல் |

## 2. <u>கோடுகள் எழுதுதல்</u>

கோடுகளை எழுதப் பழக்கும்போது தமிழ் எழுத்துகளோடு தொடர்புடைய கோடுகளை எழுதப் பழக்க வேண்டும். பின்னர், கோட்டு எழுத்துகளை எழுதப் பழகுவித்தல் வேண்டும். அதன் பின்னர், வளைவு எழுத்துகள், கோடும் வளைவும் இணைந்த எழுத்துகள் ஆகியவற்றைப் படிப்படியாக எழுதப் பழக்க வேண்டும்.

பிள்ளைகளுக்குப் பின்வரும் பயிற்சிகளைக் கொடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| அ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 4**<br>ஆள் காட்டி விரலால் காற்றில் மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் நேர்கோடுகள் எழுதுதல் |
| ஆ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 5**<br>வண்ண மணலில் ஆள்காட்டி விரலால் மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதுதல் |
| இ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 6**<br>காகிதத்தட்டில் வண்ண மணலைக் கொட்டி அதில் வலஞ்சுழி முறையில் வட்டம் எழுதுதல் |

| | | |
|---|---|---|
| ஈ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 7**<br><br>ஆள்காட்டி விரலால் வண்ணச் சாயத்தைத் தொட்டு வரைபடத்தாளில் வலஞ்சுழி முறையில் எழுதுதல் |
| உ. |  | **தசைநார் இயக்கப் பயிற்சி 8**<br><br>ஆள்காட்டி விரலை நீட்டி வண்ண மணலில் வலஞ்சுழி முறையில் எழுதுதல் |

## 3. <u>சொரசொரப்புத் தளத்தில் எழுதுதல்</u>

இப்பயிற்சிகளோடு பிள்ளைகளைச் சொர சொரப்பான தளங்களில் விரலால் எழுதிப் பழகச் செய்யலாம். தொடு உணர்வுவழி எழுத்துகளை எழுதிப் பழகுவதால் எழுத்துகளின் வடிவங்கள் பிள்ளைகளின் மனதில் நன்றாகப் பதியும்.

## 4. <u>எழுதுகோலைப் பிடித்து எழுதுதல்</u>

பிள்ளைகள் எழுதுகோலைப் பிடித்து எழுதும் திறன் பெற அவர்கள் எழுதுகோலைப்பற்றிப் பிடிக்கும் வலிமை பெற வேண்டும்; அவர்கள் எழுதுகோலை முறையாகப் பிடிக்கவும் வேண்டும். அவர்கள் எழுதுகோலை நடுவிரல், ஆள்காட்டி விரல், பெருவிரல் ஆகிய 3 விரல்களால் பிடிக்க வேண்டும்.

*****************************************